வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 31.08.2024 சனிக்கிழமை இதழ் : 244 பக்கங்கள் : 12

# தமிழ்ப் பொது வேட்பாளருக்கே தேர்தலில் முழுமையான ஆதரவு

## தமிழரசின் கிளிநொச்சி கிளையும் முடிவு

கிளிநொச்சி, ஓகஸ்ட் 31

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதென்ற தீர்மானம், கிளிநொச்சி மாவட்டக் கிளையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.**

இலங்கைத் தமிழரசுக் கட்சி - கிளிநொச்சி மாவட்டக் கிளையின் உபதலைவரும், வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சருமான தம்பிராசா குருகுலராஜா தலைமையில், மாவட்டக் கிளை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்களின் பங்கேற்போடு நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், நாளை நடைபெறவுள்ள மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப் படவுள்ளது.

அதனடிப்படையில், மத்திய செயற்குழுவுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு நேரில் சமர்ப்பிக்கப்படவுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில், உள்நாட்டு தமிழ் வாக்காளர்களிடையேயும், புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மக்கள் மத்தியிலும், அரசியற் கட்சிகளுக்குள்ளும் எழுந்துள்ள பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஆழமாகவும், விசாலமாகவும்

11



# ஜனாதிபதி ரணிலுடன் அஜித் டோவல் சந்திப்பு

கொழும்பு, ஓக. 31

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையிலான சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான

11

# வவுனியா விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

- கோகுலன் -

வவுனியா, ஓக. 31

வவுனியா குருக்கள் புதுக்குளம் பகுதியில் நேற்று மாலை 3 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் ஸ்தலத்திலேயே பலியாகியதோடு மேலும் ஒருவர் வவுனியா வைத்திய சாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி மீன் ஏற்றி வந்த வாகனத்தோடு வவுனியாவிலிருந்து குருக்கல் புதுக்குளம் நோக்கி வேலையின் நிமித்தம் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவரே விபத்தில் சிக்கி உள்ளனர்.

11

# பெரமுனவின் விஞ்ஞாபனம் மகிந்தவிடம் கையளிப்பு

கொழும்பு, ஓக. 31

பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ நேற்று பிற்பகல் தேர்தல் விஞ்ஞாபனத்தின் முதல் பதிப்பை, கட்சியின் உயர் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கையளித்தார்.

அதன்படி,

11

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கில் நேற்று கவனயீர்ப்பு!

## சர்வதேச விசாரணையை வலியுறுத்தி பேரணி

யாழ்ப்பாணம், ஓக. 31

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று, வடக்கு கிழக்கில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று யாழ்ப்பாணம்,

11




# தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரம்

கொழும்பு, ஓக. 31

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு பணியகம் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக ஒன்பது மாகாணங்களிலும் 26 கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தியுள்ளது.

அவர்கள் ஒவ்வொரு மாகாணத்துக்கும் சென்று கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என தலைமை கண்காணிப்பாளரும் ஐரோப்பிய பாராளு மன்ற உறுப் பினருமான நாச்சோ சான்செஸ் அமோர் தெரிவித்தார்.

11




# யாழ். பல்கலையிலும் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 31

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டி யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்னால் போராட்டம் ஒன்று நேற்று மதியம் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டம் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தி, வாய்களை கறுப்புத் துணியால் கட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் பெருமளவான பல்கலைக் கழக மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காணாமல்போனோர் தொடர்பில் உண்மையை வெளியிடவேண்டும்

## செஞ்சிலுவை சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 31

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நேர்ந்தது எனும் உண்மையைக் கண்டறிவதற்குரிய சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக் கணக்கான குடும்பங்கள் காணாமல்போன தமது அன் புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்வதற்காக நீண்டகாலமாகக்

11

# நீக்கப்பட்டாரா ரங்கே பண்டார? இல்லை என்று மறுக்கிறார் அவர்

கொழும்பு, ஓக. 31

கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து தான் நீக்கப்படவில்லையெனவும் , தனக்கு எதுவித உத்தியோகபூர்வ அறிவிப்பும் விடுக்கப்படவில்லையெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

பாலித ரங்கே பண்டார ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து

11

# அநுரவுடனும் பேசிய டோவல்

கொழும்பு, ஓக. 31

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவையும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் சந்தித்து பேசியுள்ளார்.

இன்னும் 22 நாட்களில் இலங்கை ஜனாதிபதித் தேர்தலொன்றை எதிர்கொள்ள உள்ள நிலையில் டில்லியின் செய்திகளுடன் இலங்கை வந்துள்ள அஜித் டோவல், அரச தரப்பினரை மாத்திரமே சந்திப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந் திருவிழாவில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை தெண்டாயுதபாணி உற்சவம் (மாம்பழத் திருவிழா) சிறப்பாக நடைபெற்றது. விநாயகப் பெருமானும் முருகப்பெருமானும் வெளிவீதியுலா வந்து சிறப்பாக மாம்பழத் திருவிழா நடைபெற்றது. (படங்கள்: - ஐ. சிவசாந்தன்)

# நல்லூர் ஆலய சூழலில் இன்றைய நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஓக. 31

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறீலசிறீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று சனிக்கிழமை சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தினரின் பஜனை நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஓக. 31

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

இணுவில் மல்லாதோட்ட வைரவர் ஆலய பிரதமகுரு சைவப்புலவர் சிவசிறீ குமார. சுவாமிநாதக் குருகள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமா மகேஸ்வரன் பிரதம அதிதியாகவும் கோப்பாய் பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவசிறீ கௌரவ அதிதியாகவும் வேலணை பிரதேச உதவிப் பிரதேச செயலாளர் கணேசமூர்த்தி பார்த்தீபன், பாராளுமன்ற ஆய்வு உத்தியோகத்தர் விஸ்வலிங்கம் முரளிதாஸ் ஆகியோர் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்கின்றனர்.

இதில், உரும்பிராய் கற்பக பிள்ளையார் அறநெறி பாடசாலை, உரும்பிராய் நாகலிங்கேஸ்வரர் அறநெறி பாடசாலை, ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறி பாடசாலை, நீர்வேலி பொன் சக்தி கலாகேந்திர அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக ஏ. ஜி. எஸ். சுவாமிநாத சர்மா இசை அர்ச்சனை அக்கடமி குழுவினர் வழங்கும் பக்தி இசை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)



# தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக நல்லூரில் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஓக. 31

தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக நல்லூர் ஆலய முன் வீதியில் துண்டுப்பிரசுரம் விநியோகித்தலும், மக்களுக்கான நேரடி பிரசாரமும் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த புதன், வியாழக்கிழமை இரவு முன்னெடுக்கப்பட்ட பிரசார பணிகளில் பல்வேறு தமிழ் சிவில் சமூக அமைப்புகளில் இயங்கும் செயல்பாட்டாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

மக்கள் பலரும் ஆர்வமுடன் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதுடன் துண்டுப்பிரசுரங்களையும் வாங்கி சென்றனர்.

# 'கருவி' மாற்றுத்திறனாளிகளின் உற்பத்திகளும் நல்லூரில் விற்பனை

## கட்டட நிர்மாணத்துக்கும் உதவ முடியும்




யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்ப்பாணம் - கருவி மாற்றுத் திறனாளிகள் வள நிலையத்தின் உற்பத்திப் பொருள்கள் நல்லூர் முன் வீதியில் உள்ள சிறிய நடமாடும் காட்சிக் கூடமொன்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு கருவி நிறுவனத்தினால் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தப்படுகின்ற கருவி திரவ சைன் சலவை சவர்க்காரம், கருவி ஊதுபத்தி உள்ளிட்ட பொருள்களும் கருவி அங்கத்தவர்களின் பனை சார்ந்த உற்பத்திப் பொருள்களும், கைவினைப் பொருள்களும் விற்கப்பட்டு வருகின்றன.

கருவி நிறுவனத்தின் சொந்தக் கட்டட நிர்மாணப் பணிகள் நீர்வேலி பூதர்மட பகுதியில் இடம்பெற்று வருகின்றன. அதற்கான நன்கொடையையும் காட்சிக் கூடத்தில் வழங்க முடியும். குறித்த கட்டட வேலைகள் தொடர்பிலான விவரங்களையும் குறித்த காட்சிக் கூடத்தில் பார்வையிட முடியும். கருவி நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற வலு சஞ்சிகையையும் குறித்த காட்சிக் கூடத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

இத்தகவல்களை கருவி நிறுவனத்தின் முன்னாள் தலைவர் சேர்ந்த க.தர்மசேகரம் தெரிவித்தார்.

## நல்லூர் சங்கிலியன் பூங்காவில்

# யாழ். மாவட்ட சிறுதொழில் முயற்சியாளரின் வர்த்தக சந்தை

யாழ்ப்பாணம், ஓக. 31

நல்லூர் முருகன் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட சிறுதொழில் முயற்சியாளர் சங்கத்தினால் நடத்தப்படும் மாபெரும் வர்த்தக சந்தை நல்லூர் கந்தன் கொடியேற்ற தினத்தன்று ஆரம்பமானது.

வடமாகாண தொழிற்துறை திணைக்களத்தின் ஒழுங்கமைப்புடன் இடம்பெறும் இச்சந்தையானது நல்லூர் சங்கிலியன் பூங்காவில் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

யாழ் மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு உற்பத்தியாளர்களும் இதில் பங்கேற்றுள்ளனர்.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள், ஆடை வகைகள், பாடசாலை பைகள், மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருள்கள், சத்துமா வகைகள், உள்ளூர் சவர்க்கார வகைகள், பூங்கன்றுகள் போன்ற பல்வேறு பொருள்களையும் சந்தையில் காட்சிப்படுத்தியுள்ள னர்.

போதிய விளம்பரப்படுத்தல்கள் இன்மை மற்றும் ஆலயத்திலிருந்து தூரம் காரணமாகவும் மக்கள் வருகை குறைவாக உள்ளதாகவும் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்தனர். நல்லூர் முருகனை நாடி வரும் மக்கள் ஒருமுறையேனும் இந்தக் காட்சிக் கூடங்களுக்கு விஜயம் செய்து உள்ளூர் உற்பத்திப் பொருள்களை வாங்கி தங்களை ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

கண்காட்சி இடம்பெறும் வாயிலுக்கு அருகில் தமிழர் பாரம்பரிய கூத்துகள், நடன நிகழ்வுகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
31.08.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# டோவல் சொன்னதும், கட்சிகள் சொல்லவேண்டியதும்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை உபயோகமாக பயன்படுத்துவது தொடர்பில், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்குமார் டோவல் குறிப்பிட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில், தமிழ் கட்சிகளின் முடிவு தொடர்பில் தான் எதுவித கருத்துக்களையும் கூறப் போவதில்லையென்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வாறான சந்திப்புக்களின் போது தமிழ் கட்சிகளின் தலைவர்கள் எவ்வாறான கருத்துக்களை கூறுகின்றனர் என்பது தெளிவாக வெளிவருவதில்லை - ஆனால், நிச்சயமாக எவருமே ஒன்றுபட்டு பேசுவதில்லை என்பது மட்டும் உண்மையானது.

இந்தச் சந்திப்பின் போது, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பவர்கள் மற்றும் அதனை முட்டாள்தனமானது என்று பேசுபவர்கள், அதற்கும் மேலாக, இது ஓர் இந்திய முகவர் வேலையென்று கூறுபவர் என, பல தரப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒருமித்து டோவலை சந்தித்திருக்கின்றனர்.

இந்தியா தொடர்ந்தும் ஒரு விடயத்தை கூறிவருகின்றது - அதாவது, நீங்கள் ஒரு குரலில் பேசுவதில்லை - அனைவருமாக ஒன்றிணைந்து ஒரு நிலைப்பாட்டை முன்வைப்பதில்லை என்பதை. இந்தியாவின் குற்றச்சாட்டை எப்போதும் அச்சொட்டாக மெய்ப்பிப்பவர்களாகவே தமிழ் கட்சிகளின் தலைவர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

டோவல் ஒரு சக்தி வாய்ந்த நபர் ஆயினும், அவரின் இந்து சமுத்திர பிராந்திய கரிசனைகளை, தமிழ் தேசியம் பேசும் - பேசாத கட்சிகளின் தலைவர்களால் புரிந்து கொள்ள முடிந்திருக்கின்றதா - முடியுமா என்பதையெல்லாம் ஒரு புறமாக வைத்துவிடுவோம் - ஆனால், டோவல் போன்ற ஒருவரின் முன்னால் நாங்கள் ஏன் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்க வேண்டியேற்பட்டது? இதனை ஏன் தவிர்க்க முடியாமல் இருந்தது என்பதை உறுதியாக கூறக் கூடியவர்களாக இவர்களால் இருக்க முடிந்ததா என்றால் - பதில் இல்லை என்பது தான்.

மதில் மேல் பூனை நிலைப்பாடுகளை பேணிப் பாதுகாப்பதை சில கட்சிகள் ஓர் அரசியல் சாதுரியமாக எண்ணிக் கொள்ளலாம். ஆனால், அது அடிப்படையிலேயே தவறானது. கொழும்பிலுள்ள தூதரகங்கள் கருத்தில் கொள்ளத்தக்க கட்சிகளாக, தலைவர்களாக இவர்களில் எத்தனை பேர் இருக்கின்றனர் - இவர்களால் இருக்க முடியுமா? - என்று கேள்வி எழுப்பினால், அப்போதும் பதில் பூச்சியமாகவே இருக்கும். அந்தளவிற்கு பாராளுமன்ற கதிரைகளுக்காக மல்லுக்கட்டும் அரசியல் கட்சிகளின் தலைவர்களாகவே பெரும்பாலானவர்கள் இருக்கின்றனர்.

## நல்லூரான் திருவடி - 23

# யோகர் அரங்கேற்றிய எனது தாயாரின் சங்கீத அரங்கேற்றம்!

அனந்த பாலகிட்ணர்

இசைப்புலவர் அமரர் என். சண்முகரத்தினத்தின் முதல் மாணவியாக எனது தாயார் லஷ்மிதேவி பாலகிட்ணர் விளங்கினார். இசைப்புலவர் என். சண்முகரத்தினம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அன்றைய காலத்தில் தங்கப்பதக்கம் பெற்ற ஈழத்தின் உன்னதமான கர்நாடக இசைக் கலைஞர். இந்திய இசை விற்பன்னர்களால் கூட பெரிதும் போற்றப்பட்டவர்.



எனது தாயார் ஒரு தடவை என்னிடம் கூறிய விடயம், இன்றைய யாழ்ப்பாண பல்கலைக்கழகமாக இருக்கின்ற அன்றைய பரமேஸ்வரா கல்லூரியில் நவராத்திரி விழா வொன்றில் இசைப்புலவர் என். சண்முகரத்தி னம் அவர்களது இசைக்கச்சேரி நடைபெற்ற தாம். தாம் அவரது மாணவி என்றவகையில் அவருக்கு தாமே அன்று அவர் பின்னாலி ருந்து தம்புரா மீட்டினாராம். சண்முகரத் தினம் அவருக்கு மிகப்பிடித்தமான தோடி இராகத்தை அற்புதமாக ஆலாபனை செய்துகொண்டிருந்தா ராம். அன்றைய தினம் இந்திய நாதஸ்வர கலைஞர் இராஜரத்தினம்பிள்ளையின் கச்சேரியும் இடம்பெற இருந்தது. நாதஸ்வர கச்சேரி இறுதி நிகழ்வாக இருந்தது. இந்திய நாதஸ்வர மகா வித்வான் ராஜரத்தினம் பிள்ளையும் பரமேஸ்வரா கல்லூரி அரங்கிற்கு வந்திருந்தார்.

சண்முகரத்தினம் அவர்களது தோடி ஆலாபனையில் மெய்மறந்த ராஜரத்தினம் பிள்ளை, "இதுபோன்ற தோடி ஆலாபனையை இந்தியாவில்கூட நான் கேட்டதில்லை. சண்முகரத்தினம் எப்போது தமது கச்சேரியை நிறைவு செய்கிறாரோ அதுவரை பொறுத்திருப்பேன்" என்றாராம்.

இதனைக் குறிப்பிடுவதன் முக்கிய காரணம், எம்நாட்டு மகாவித்வான் என். சண்முகரத்தினம் எவ்வளவுதூரம் இந்திய கலைஞர்களால் மதிக்கப்பட்டார் என்பதற்கேயாகும்.

1957ஆம் ஆண்டில் எனது தாயாரது இசை அரங்கேற்றம் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. அன்றைய யாழ்ப்பாண அரச அதிபரும் யோகர் சுவாமிகளது அடியவருமான எம். சிறிகாந்தா அரங்கேற்றத்துக்கு தலைமை வகித்தார்.

அரங்கேற்ற தினத்திலன்று காலை யோகரின் அதீத பக்தரான எனது பாட்டனார் க. பொன்னம்பலம் தாயாரை அழைத்துக்கோண்டு யோகரது ஆச்சிரமத்துக்கு அவர் விரும்பி உண்ணும் இடியப்ப உணவு மற்றும் பழவகைகள் என்பவற்றோடு சென்றாராம். அதிகாலை வேளை சுவாமி நிஷ்டையிலிருந்து விழித்துக்கொண்ட பின்னர் எனது பாட்டனார், தாயார் ஆகியோரை உள்ளே அழைத்து, தரையில் அமரவைத்தாராம். பின்னர் தாயாரிடம், "முதலாவதாக என்ன பாடலைப் பாடப்போகிறாய்?" என்று கேட்டாராம்.

அப்போது, அம்மாவும் சுவாமியின் காலடியில் வீழ்ந்து வணங்கிய பின்னர், "வாதாபி கணபதி" என்ற பாடலை தமது தம்புராவை மீட்டியபடி பாடினாராம் அப் பாடலை கண்களை மூடியபடி அமைதியாக இருந்து சுவாமிகள் கேட்டபின்னர், "சரி, அரங்கேறிவிட்டது உனது கச்சேரி. சந்தோஷமாகப் போய் வா" என்று கூறி ஆசீர்வதித்து அனுப்பினாராம்.

இதன்பின்னர் அன்று மாலை அன்றைய முன்னணி பக்கவாத்திய கலைஞர்களது இசையோடு அம்மா தனது குரு சண்முகரத்தினம் அவர்களது பாதங்களிலும் வீழ்ந்து ஆசிபெற்ற பின்னர் தனது கச்சேரியை ஆரம்பித்தாராம். அன்று, தாம் கல்யாணி இராகத்தையே முதன்மைப்படுத்தியபோது, தம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவிற்கு கச்சேரி களைகட்டியிருந்ததாம். அம்மாவின் குரு இசைப்புலவர் என். சண்முகரத்தினம் ஆனந்தகண்ணீர் சொரிந்தவராக, "என்னைப் பெருமைப் படுத்திவிட்டாய்" என்று கூறினாராம்.

யோகர் சுவாமிகள் வாழ்ந்த காலங்களில் மட்டுமல்ல. இன்றுவரை அவரையே எமது குருவாக நினைத்து எமது இல்லங்களில் இடம்பெறும் எந்தவொரு நிகழ்விலும் அவரது ஆசியையே வேண்டி நிற்போம். எனது பத்திரிகைத்துறைப் பயணமும் யோக ரின் பரிபூரண ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட 'ஈழநாடு' பத்திரிகையிலேயே ஆரம்பமானதென்பது குறிப்பிடத்தக்கது. (நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 31 சனிக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 15
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திரையோதசி




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் கருத்துக்கு ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். தலைச்சுற்றல் முழங்கால் வலி வந்து விலகும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் தேவையற்ற வீண் இழப்புகள் ஏற்படும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டு. உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**துலாம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள், கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வேலையாட்களிடம் வளைந்து கொடுத்துப்போவது நல்லது. நேர் மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மகரம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். அமோகமான நாள்.

**கும்பம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும்.

# முருகன் மாநாட்டு தீர்மானங்களை உறுதியுடன் நிறைவேற்ற வேண்டும்

**பா. ஜ. க. தேசிய மகளிரணி தலைவி வானதி**

கோவை, ஓக. 31

பழநியில் தி. மு. க. நடத்திய முத்தமிழ் முருகன் மாநாட்டு தீர்மானங்களை இந்து சமய அறநிலையத் துறை உறுதியுடன் நிறைவேற்ற வேண்டும் என்று பா. ஜ. க. தேசிய மகளிரணி தலைவி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், "தமிழக அரசின் சார்பில் பழநியில் ஓகஸ்ட் 24, 25ஆம் திகதிகளில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில், 21 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றில், முருக பக்தி இலக்கியங்களை மையப்படுத்தி இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோவில்களின் சார்பில் நடத்தப்படும் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்படும்.

விழாக் காலங்களில் முருகன் திருக்கோவில்களில் மாணவ, மாணவிகளை கொண்டு கந்த சஷ்டி பாராயணம் செய்யப்படும். முருகப் பெருமானின் பெருமைகள் மற்றும் இலக்கியங்கள் குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின் கீழ் உள்ள திருக்கோவில்களின் சார்பில் நடத்தப்படும் கல்லூரிகளில் சிறப்பு ஆன்மீகப் பாடப்பிரிவுகளை ஏற்படுத்த அரசுக்கு பரிந்துரைக்கப்படும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முருகன் மாநாட்டை நடத்தியதில் தி. மு. க. அரசுக்கு பல்வேறு உள்நோக்கங்கள் இருந்தாலும் இந்த தீர்மானங்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன என்றும் வானதி குறிப்பிட்டுள்ளார். (எ)

# செப். 11, 14, 15ஆம் திகதிகளில் விநாயகர் ஊர்வலம் நடத்தலாம்

சென்னை, ஓக. 31

சென்னையில், விநாயகர் சிலைகளை செப்ரெம்பர் 11, 14, 15 ஆகிய திகதிகளில் ஊர்வலமாக எடுத்துச் சென்று 4 இடங்களில் கடலில் கரைக்க பொலிஸார் அனுமதி வழங்கியுள்ளனர். விநாயகர் சதுர்த்தி விழா அடுத்த செப். 7ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் இந்து அமைப்புகள், தன்னார்வலர்கள் மற்றும் குடியிருப்பு வாசிகள் உட்பட பல்வேறு தரப்பினர் விநாயகர் சிலைகளை நிறுவி, அதை வழிபட்டு வணங்குவார்கள்.

பின்னர், ஒருவார காலம் சிறப்பு பூஜைகள், அன்னதானம் நடைபெறும். பிறகு, விநாயகர் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நீர் நிலைகளில் கரைக்கப்படும். இதற்கு பொலிஸார் பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் வழிமுறைகளை வகுத்து கொடுத்துள்ளனர். (எ)

# விஜய் கட்சியின் மாநாடு ஏற்பாடுகள் அதி தீவிரம்

மதுரை, ஓக. 31

விக்கிரவாண்டியில் நடக்கும் நடிகர் விஜய் கட்சியின் முதல் அரசியல் மாநாட்டில் பங்கேற்க மதுரையில் இருந்து சுமார் 200 வாகனங்களில் தொண்டர்களை அழைத்துச் செல்ல திட்டமிட்டுள்ளனர்.

தமிழக வெற்றிக் கழகம் என்ற அரசியல் கட்சியை நடிகர் விஜய் கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கினார். இதனைத் தொடர்ந்து கட்சியின் கொடியை கடந்த வாரம் சென்னை பனையூரில் அறிமுகம் செய்தார். அப்போது,"கட்சிக்கான கொள்கை விவரம், கொடியின் விளக்கம் குறித்து விரைவில் நடக்க இருக்கும் கட்சியின் முதல் மாநில மாநாட்டில் விரிவாக பேசப்படும்" என விஜய் அறிவித்தார். இதைத் தொடர்ந்து செப். 23இல் விக்கிரவாண்டியில் மாநாட்டை நடத்தத் திட்டமிட்டு, அதற்கான பூர்வாங்கப் பணிகளை த. வெ. க நிர்வாகிகள் தொடங்கியுள்ளனர். (எ)




# "விரைவில் துணை முதல்வராக உதயநிதி பொறுப்பேற்பாராம்"

மதுரை, ஓக. 31

தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கூறியபடி 2026 சட்டப்பேரவை தேர்தலில் 200 தொகுதிகளில் கூட்டணி கட்சிகளோடு இணைந்து வெற்றிபெற இப்போதிருந்தே கட்சி பணியாற்றுங்கள். விரைவில் துணை முதல்வராக பொறுப்பேற்று வருங்கால தமிழகத்தை வழிநடத்த உள்ளார் உதயநிதி என அமைச்சர் பி. மூர்த்தி தெரிவித்தார்.

மதுரையில் நடந்த தி. மு. க. செயல்வீரர்கள் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழக முதல்வர் சந்திக்கும் தேர்தல்களில் எல்லாம் வெற்றி பெற்று தமிழக மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறார்.

இதன்படி 2026 சட்டப்பேரவைத் தேர்தலிலும் கூட்டணிக் கட்சிகளோடு இணைந்து 200 தொகுதிகளுக்கும் மேல் வெற்றி பெற்று தி. மு. கவின் பொற்கால ஆட்சி தொடர வேண்டும்- என்றார். (எ)

# அமெரிக்காவில் உற்சாக வரவேற்பு




சென்னை, ஓக. 31

அமெரிக்கா சென்றுள்ள தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு இந்தியத் துணை தூதுவர் சிறீகர் ரெட்டி, மற்றும் அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு வழங்கினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்தது

## தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு டோவல் அறிவுரை

கொழும்பு, ஓக. 31

**ஒற்றுமையாக ஒருமித்து நின்று, தமிழ் மக்களின் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்த தீர்மானமாக அமையும் என்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

இந்த சந்திப்பில் தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம், தேர்தல் புறக்கணிப்பு உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன என்று தெரிய வருகிறது.

இதன்போது கருத்து வெளியிட்ட இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல்,

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் எவ்வாறு செயல்படவேண்டும் என்பது குறித்து தான் எதனையும் கூறப்போவதில்லை. இருப்பினும், அனைவரும் ஒற்றுமையாக ஒருமித்து நின்று, தமிழ் மக்களின் வாக்குகளை உபயோகமான முறையில் பயன்படுத்துவதே சிறந்த தீர்மானமாக அமையும் - என்று கூறியிருந்தார்.

இந்தச் சந்திப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் நிலவரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பில் பங்கேற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செ. கஜேந்திரன் எம். பி., "75 வருடகால அனுபவத்தில் தமிழ் மக்களால் ஒற்றை யாட்சியின் கீழ் வாழ முடியாது என்பதைத் தாம் புரிந்துகொண்டிருப்பதாகவும், அதேபோன்று அரசமைப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாகத் தோல்வியடைந்திருப்பதால் அதனூடாக தமிழ் மக்களால் முன்னோக்கி செல்ல முடியாது - என்றும் கூறினார். (ஐ)

# வவுனியாவில் கடத்தப்பட்ட பெண் பொலிஸாரால் மீட்பு!

## யாழ். இளைஞர்கள் நால்வர் கைது

வவுனியா, ஓக. 31

வவுனியாவில் கடத்தப்பட்ட பெண் ஒருவர் மீட்கப்பட்டுள்ளார். அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வானும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா - கொக்குவெளி - அரசடி வீதியில் வசித்து வந்த குடும்ப பெண் ஒருவரை யாழ்ப்பாணத்தில் இருந்து வான் ஒன்றில் வந்த குழுவினர் கடத்திச் சென்றனர்.

வீட்டில் இருந்த பெண்ணின் மாமியார் பெண்ணை தூக்கிச் சென்றவர்களை விரட்டிய போது அவரை தாக்கி விட்டு சென்றிருந்தனர். அவர், வவுனியா தலைமை பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விரைந்து செயல்பட்டு கடத்திச் செல்லப்பட்ட பெண்ணை மீட்டனர்.

கடத்தப்பட்ட பெண் பளை பகுதியில் வைத்து பொலிஸாரால் மடக்கப்பட்டது. கடத்தலுக்கான வாகனமும் கைப்பற்றப்பட்டதுடன் 4 இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் யாழ்ப்பாணத்தில் மணியந்தோட்டம், இருபாலை, சுன்னாகம் ஆகிய இடங்களை சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

பொலிஸார் அடுத்த கட்ட விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# ஒரேநாளில் 25 டிப்பர்கள் கொடிகாமத்தில் சிக்கின

தென்மராட்சி, ஓக. 31

கொடிகாமத்தில் ஒருநாளில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் 25 டிப்பர்கள் பிடிபட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற 24 டிப்பர்களும் அனுமதியின்றி மரங்களை ஏற்றிச் சென்ற ஒரு டிப்பருமாக 25 டிப்பர்கள் சாவகச்சேரி பொலிஸாரால் பிடிக்கப்பட்டன.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் பணிப்புரைக்கமைய நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே இந்த டிப்பர்கள் பிடிப்பட்டன. பிடிபட்ட டிப்பர்களின் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# தேர்தல் கடமைகளில் 54 ஆயிரம் பொலிஸார்!

கொழும்பு, ஓக. 31

ஜனாதிபதித் தேர்தல் கடமைகளில் 54 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

வாக்கெடுப்பு நிலையங்கள், வாக்கு எண்ணும் நிலையங்களை நிர்வகித்தல், வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லப்படுவதைக் கண்காணித்தல், ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் அவற்றைத் தீர்ப்பது, அசம்பாவிதங்கள் இன்றி தேர்தல் நடைபெறுவதை உறுதிசெய்தல் போன்ற பணிகளுக்காக நாடு முழுவதும் பொலிஸார் கடமையில் ஈடுப்படுத்தப்படவுள்ளார்கள்.

நாடு முழுவதிலும் உள்ள 13 ஆயிரம் வாக்கெடுப்பு நிலையங்களிலும், 45 வாக்கு எண்ணும் நிலையங்களிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அசங்க கரவிட்ட தெரிவித்துள்ளார்.

மேலும், தேர்தல் காலத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் வகையில் பொலிஸார் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட 3 ஆயிரத்து 200 வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

தேர்தல்கள் சட்ட மீறல்களை தடுக்க பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த பதாகைகள் மற்றும் கட்அவுட்களை நீக்குவதற்காக 1,500 தொழிலாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 358 சட்டவிரோத சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் கட்அவுட்கள் அகற்றப்பட்டுள்ளன.

நாடு முழுவதிலும் உள்ள 607 பொலிஸ் நிலையங்களில் தேர்தல் கடமைகளுக்காகவும் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்காகவும் தலா மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஜனாதிபதி வேட்பாளர்களின் பாதுகாப்புக்காக 260இற்கும் மேற்பட்ட பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

250இற்கும் மேற்பட்ட தேர்தல் பேரணிகள் மற்றும் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படும் நிலையங்களில் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

# விபத்தில் மகள் பலி; தந்தை படுகாயம்!

கொழும்பு, ஓக. 31

மோட்டார் சைக்கிளும் இ. போ. ச. பேருந்தும் மோதிய விபத்தில் மகள் உயிரிழந்தார். தந்தை படுகாயமடைந்துள்ளார்.

காலி - யக்கலமுல்ல, கராகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் மகள் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும், சிகிச்சை பலனின்றி மகள் உயிரிழந்தார். தந்தை தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலஞ்சம் வாங்கிய பொலிஸ் சார்ஜன்ட் கைது!

கொழும்பு, ஓக. 31

இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

களுத்துறை - மத்துகம பொலிஸ் நிலையம் - மத்துகம நீதிமன்றத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான பொலிஸ் சார்ஜன்ட் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை மீட்டுக் கொடுப்பதற்காக இலஞ்சம் வாங்கியபோதே அவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# விஷ ஜந்து தீண்டி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31

விஷ ஜந்து தீண்டியதில் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். கைதடி வடக்கை சேர்ந்த இராசையா தர்மசேனன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

காணியைத் துப்புரவு செய்த போது விஷஜந்து ஒன்று அவரை தீண்டியதாகக் கூறப்படுகின்றது. உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் அவர் முன்னதாகவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவரின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

# பட்டங்களின் மூலமாக மின்சாரம் பெற திட்டம்!

கொழும்பு, ஓக. 31

வீட்டு உபயோகத்துக்குத் தேவையான மின்சாரத்தை பட்டங்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானியல் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் நுவரெலியாவில் நடைபெற்ற பட்டத் திருவிழாவில் இதற்கான சோதனை நடத்தப்பட்டதாகவும் தொடர்ந்து இந்த சோதனை நடவடிக்கையை முன்னெடுக்கவும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வது பொதுவானது என்றாலும் நுவரெலியாவில் இந்த நோக்கத்துக்காகப் பட்டங்களைப் பயன்படுத்துவது ஒரு புதிய முயற்சியாகும். இந்த யோசனை இலங்கைக்கு புதியது. எனினும் இது ஏற்கனவே அமெரிக்காவில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

அமெரிக்காவில் உயரப்பறக்கும் ஒரு பட்டத்தின் மூலம் குறைந்தது 4 வீடுகளுக்கான மின்சாரம் பெறப்படுகிறது. இலங்கையில் இந்த முயற்சியை முன்னெடுப்பதற்கு, இலங்கை முழுவதும் உள்ள பட்டம் பறக்கவிடும் சங்கங்களுடன் கலந்துரையாடல் நடத்தப்படும்.

இந்த திட்டத்தின் ஊடாக 500 மீற்றருக்கு மேல் உயரத்தில் பறக்கும் பட்டங்களின் மூலம் 1,800 டெராவோட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இதன்படி, எதிர்காலத்தில் மின்சார உற்பத்திக்கான புதிய முறைகளை அறிமுகப்படுத்த கொழும்பு பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளதாக பேராசிரியர் சந்தன ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் துணிச்சல் மிக்க தலைமைத்துவமே தேவை!

## அஜித் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, ஓக. 31

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க போன்ற துணிச்சலான தலைமைத்துவமே நாட்டுக்குத் தேவை என பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



அம்பாந்தோட்டையில் நடைபெற்ற 'இயலும் சிறிலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அஜித் ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

அரகலய இருந்த காலத்தில் ஆளும் கட்சியினர் செத்துப் பிழைக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது. இன்று பங்களாதேஷில் காணும் காட்சிகளை அன்று இலங்கையில் பார்த்தோம்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் வீதியில் கொல்லப்பட்டனர். பாராளுமன்றத்துக்கு தீ வைக்க முயற்சித்தனர்.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு இடமளிக்கவில்லை. அன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது துணிச்சலை காண்பித்தார்.

அப்போது சபாநாயகர் கட்சித் தலைவர்களை அழைத்து பேசியபோது அதற்கு செல்லக் கூட எனது குடும்பத்தினர் அனுமதிக்கவில்லை. எம் மீது தாக்குதல் நடத்தப்படும் என அஞ்சினர்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவை எமது கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதி பதவியில் அமர்த்த ஆதரவளித்தோம்.

அதனால் இரு வருடங்களுடன் அவருடைய பாதுகாப்பின் கீழ் மக்கள் சுமுகமாக வாழக்கூடிய நாட்டை கட்டியெழுப்பினோம்-என்றார்.

(அ)

# நாமலின் தேர்தல் விஞ்ஞாபனம் செப்ரெம்பர் 02ஆம் திகதி வரும்



கொழும்பு, ஓக. 31

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் செப்ரெம்பர் 02ஆம் திகதி வெளியிடப்படுமென இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அநுரகுமார திசாநாயக்க, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவை, ஒன்றை ஒன்று ஒத்ததாகக் காணப்படுகின்றன. தனியொரு நபர் அல்லது குழு இந்த மூவருக்கும் விஞ்ஞாபனம் தயாரித்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுகிறது.

நாட்டின் தற்போதைய நிலைமையில், நாமல் ராஜபக்ஷவுக்கே மக்கள் ஆதரவு காணப்படுகின்றது. நாமலே தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாட்டின் அபிவிருத்திக்கான நீண்ட கால திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன

மஹிந்த சிந்தனையின் 02ஆம் கட்டமாக அதனை நாம் பார்க்கலாம்.

போலியான வாக்குறுதிகள் அன்றி, நடைமுறைக்கு சாத்தியமான முன்மொழிவுகளை அதில் உள்ளடக்கியுள்ளோம்-என்றார்.

(அ)

# நாணய நிதிய உடன்படிக்கைகளை மறுசீரமைத்தால் நாட்டுக்கு ஆபத்து

## ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 31



ஜனர்திபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற எதிர்க்கட்சி வேட்பாளர்கள் கூறுவதைப் போன்று, சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை மறுசீரமைத்தால் அத்தருணமே நாடு ஆபத்தில் சிக்க நேரிடும் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள அரசியல் அலுவலகத்தில், அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, அலி சப்ரி மற்றும் காஞ்சன விஜேசேகர ஆகியோர் கூட்டாக ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர். இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க-

எதிர்க்கட்சி வேட்பாளர்கள் கூறுவதைப் போன்று, சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகளை மறுசீரமைத்தால் அத்தருணமே நாடு ஆபத்தில் சிக்க நேரிடும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியால் அதல பாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டை மீட்டு, மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய நாடாக மாற்றியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வேறு யாரும் சவாலை ஏற்க விரும்பவில்லை. அந்த சவாலை ஏற்கும் திறன் அவர்களிடம் இருக்கவும் இல்லை.

இந்த நேரத்தில், நாட்டின் மிக முக்கியமான விடயம் பொருளாதாரம் ஆகும். பல தரப்பினரும் பொருளாதாரம் தொடர்பான பல்வேறு முன்மொழிவுகளை முன்வைத்தாலும், அந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தும் இயலுமை பற்றிய புரிதல் இல்லை என்றே தோன்றுகிறது.

நாம் தோல்வியடைவோம் என்று நினைத்து சிரித்தவர்களும், நமது வேலைத் திட்டம் சீர்குலையும் என்று எண்ணியவர்களும் இன்று மக்கள் முன் வந்து வாக்குறுதிகளை அளிப்பது வேடிக்கையாக உள்ளது-என்றார்.

(அ)

# எனது ஆட்சியில் ராணுவத்தின் கௌரவம் பாதுகாக்கப்படும்!

## நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, ஓக. 31

போர் காலத்தில் மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர்மீது போர்க்குற்றச்சாட்டு முன்வைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. இது எமது நாட்டு இராணுவத்தின் அபிமானம்மீது தொடுக்கப்படும் தாக்குதலாகும். எனவே, எமது ஆட்சியின் இராணுவத்தின் கௌரவம் பாதுகாக்கப்படும் - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சில நாடுகளில் இடம்பெறும் யுத்தங்களின்போது சிவிலியன்கள் அப்பட்டமாகக் கொல்லப்படுகின்றனர். இது தொடர்பில் எந்தவொரு நாடும் வாய் திறப்பதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே நாமல் ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

மகாசங்கத்தினர் மற்றும் இராணுவத்தினரை அவமதிப்பதை சிலர் நவீன போக்காக கொண்டு செயற்படுகின்றனர். ஒரு காலகட்டத்தில் மகா சங்கத்தினர் பயணிக்கும் வாகனம் மற்றும் அவர்களின் நடத்தை பற்றி கதைக்கப்பட்டது. இது திட்டமிட்ட அடிப்படையில் பௌத்த கலாசாரம்மீது தொடுக்கப்பட்ட தாக்குதலாகும்.

மற்றுமொரு பிரிவினர் இராணுவத்தினரை இலக்கு வைத்து செயற்படுகின்றனர். இராணுவத்தினரை நீதிமன்றங்களுக்கு கொண்டுசென்றனர்.

போர்க்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. ஒரு புறத்தில் சிறையில் இருந்து புலிகள் விடுவிக்கப்படும்போது மறுபுறத்தில் படையினரை குற்றவாளிகளாக்குவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டது. சர்வதேச நீதிமன்றம்முன் கொண்டுசெல்வதற்கும் முயற்சித்தனர்.

உலகில் சில நாடுகளில் நடக்கும்போரை பார்க்கும்போது சிவிலியன்கள் அப்பட்டமாக கொல்லப்படுகின்றனர். எந்த வொரு நாடும் அதைப்பற்றி கதைப்பதில்லை. நாம் மனிதாபிமான நடவடிக்கையையே முன்னெடுத்தோம். எமது படையினர், தமிழ் மக்களை பாதுகாத்தனர்.

இப்படியானவர்கள் மீதே போர்க்குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. எமது ஆட்சியின் இராணுவத்தின் கௌரவம் பாதுகாக்கப்படும். நலன்புரி விடயங்களும் உறுதிப்படுத்தப்படும்-என்றார்.

(அ)

# நாமல் ஆட்சிக்கு வருவது கனவிலும் நடைபெறாது!

## கூறுகிறார் நிமல் லான்சா

கொழும்பு, ஓக. 31

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தை தீயிட்டு கொளுத்துவதற்கு இடமளிக்காமல் ஜனநாயகத்தை பாதுகாக்காமல் இருந்திருந்தால், நாடு பங்களாதேஷை விட கீழ் மட்டத்திற்கு வீழ்ந்திருக்கும். இலங்கையில் அவ்வாறானதொரு சூழல் ஏற்படக் காரணமானவர்கள் ராஜபக்ஷர்களே. எனவே நாமல் ஆட்சிக்கு வருவது கனவிலும் நடக்காது என பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

திவுலப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த 102 பேர் ராஜபக்ஷர்களை விட்டு வெளியேறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளனர். 35இற்கும் மேற்பட்ட கட்சிகள், அமைப்புகள் அவருக்கு ஆதரவாக வந்துள்ளன. 112க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஆட்சி கையளிக்கப்பட்டபோது ராஜபக்ஷ குடும்பமே அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்தது. அதுவே அவர்களது தோல்விக்கும் வழி வகுத்தது.

எனவே பரீட்சித்துப் பார்ப்பதற்காக கோட்டாபயவுக்கு வாக்களித்ததைப் போன்ற தவறை ஜே.வி.பி.க்கு வாக்களிப்பதன் மூலம் மக்கள் செய்துவிடக்கூடாது.

2022 இல் நாட்டில் நிலவிய அரசியல், பொருளாதார நெருக்கடிகளின் போது வன்முறைகள் தலைதூக்கின. அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசைகளில் காத்திருந்த மக்கள் மரணித்ததை மறக்க முடியாது. அவ்வாறான தொரு நிலைமை மீண்டும் ஏற்படுவதற்கு வாய்ப்பளித்து விடக் கூடாது. எனவே ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட வேண்டும்.

ராஜபக்ஷ அரசாங்கம் எம்மை வீதியில் நடக்க முடியாத நிலைக்கு ஆளாக்கியது. இரண்டு வருடங்களுக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை மாற்றியமைத்தார்-என்றார்.

(அ)

# அனுரகுமார வெற்றி பெற்றால் 6 மாதங்கள் மட்டுமே பதவியில்!

## கூறுகிறார் ஹிருணிகா பிரேமச்சந்திர

கொழும்பு, ஓக. 31

ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றால் ஆறு மாதங்கள் மாத்திரமே ஜனாதிபதி பதவியில் இருக்க முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ அதிகபட்சமாக இரண்டு வருடங்கள் ஜனாதிபதியாக பதவி வகிப்பார் என நான் அப்போதே கூறியிருந்தேன்.

அதுவே உண்மையானது என குறிப்பிட்டுள்ளார். சஜித் பிரேமதாச எந்த தவறும் செய்யாத மிக சுத்தமான அரசியல்வாதி என அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் ஆதரவு பெரமுனவினரின் புதிய கூட்டணி வியாழன் அறிவிப்பு

கொழும்பு, ஒக. 31

**சிறீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி ஜனாதிபதிக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய புதிய கூட்டணி எதிர்வரும் 5ஆம் திகதி - வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.**

இதனை, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய கூட்டணியை அமைப்பது தொடர்பான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. இதில் சுமார் 60 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

எதிர்வரும் 5ஆம் திகதி பத்தரமுல்லை வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் புதிய கூட்டணியை அறிவிக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கூட்டமைப்பின் தலைவராக பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் செயலாளராக அமைச்சர் ரமேஷ் பத்திரணவும் நியமிக்கப்படவுள்ளனர்.

ஏனைய பதவிகளுக்கான உறுப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நியமிக்கப்படவுள்ளனர். அத்துடன், இந்த புதிய கூட்டணி எதிர்காலத்தில் நடக்கவுள்ள தேர்தல்களில் போட்டியிடும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தனது தேர்தல் அறிக்கையை தலதா மாளிகையில் கையளித்ததுடன், மல்வத்தை, அஸ்கிரிய மகாநாயக்கர்களிடமும் கையளித்தார்.



சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் தேரர்களிடம் தனது தேர்தல் அறிக்கையை கையளித்தார்.

# தொகுதி ரீதியாக பிரசாரம் செய்ய ஐ. தே. கவினருக்கு ரணில் உத்தரவு

கொழும்பு, ஒக. 31

விரைவில் தத்தமது தொகுதிகளுக்கு சென்று தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பில் இருக்காது தத்தமது தொகுதிகளில் வீடு வீடாக செல்லும் செயல்திட்டத்தை ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி ஐ.தே.கவின் அதிகாரிகள் குழுவுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்.

இதன்படி, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்த்தன கம்பஹா மாவட்டத்திலும் வஜிர அபேவர்த்தன காலி மாவட்டத்திலும் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க கொழும்பு - மாத்தறை மாவட்டங்களிலும் அகில விராஜ் காரியவசம் குருநாகல் மாவட்டத்திலும் ரவி கருணாநாயக்க கொழும்பு வடக்கிலும் பொருளாளர் பிரோ பாருக் மாவனல்லையிலும் பிரசாரங்களை செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிருஷாந்த தியடோர், சமல் ஹேரத், ரொனல்ட் பெரேரா ஆகியோர் கட்சித் தலைமையகத்திலும் இருந்து அனைத்து மாவட்டங்களையும் தொடர்புபடுத்தி நடவடிக்கை மேற்கொள்ளவும் சுயேச்சையாக தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# அநுர ஆட்சியை கைப்பற்றினால் நாட்டில் இரத்தக்களரியே ஏற்படும்

## எச்சரிக்கிறார் அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, ஒக. 31

அநுரகுமாரவின் கும்பல் அதிகாரத்தை கைப்பற்றினால் இலங்கையில் இரத்தக்களரி ஏற்படும் - இவ்வாறு நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க எச்சரித்துள்ளார்.

கம்பஹா - திவுலுப்பிட்டி - கட்டான பகுதியில் இடம்பெற்ற பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியுடன் இந்த நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் உருவானது. நாங்கள் எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகளில் கஷ்டப்பட்டோம். அந்த காலம் எங்களுக்கு நினைவில் உள்ளது.

ஜனாதிபதியின் வெற்றிக்காக செயல்படுவதால் தற்போது பிரசன்ன ரணதுங்க ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளேன் என்று சிலர் கூறுகின்றனர். இல்லை. நான் இன்னும் பொதுஜன பெரமுனவில்தான் இருக்கிறேன்.

இன்று மகிந்தவின் மேடையில் வாய்சவடால் விட ஏராளமான வீரர்கள் உள்ளனர். ஆனால், 2015 இல் அவர் தோற்றபோது அங்கு யாரும் இருக்கவில்லை. அவரை மீண்டும் அரசியலுக்கு கொண்டு வர நான்தான் முன்னின்று செயல்பட்டேன்.

பொருளாதாரம் சரிந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க மீண்டும் கட்டியெழுப்பியுள்ளார். இந்த ஜனாதிபதித் தேர்தலில் அவரை நாம் ஆதரிக்க வேண்டும். வரலாற்றில் பல நாடுகள் மிகவும் கடுமையான நெருக்கடிகளை சந்தித்துள்ளன. அந்த சமயங்களில் அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டு நலனுக்காக மக்கள் ஒன்றிணைந்தனர். அத்தகைய ஓர் உன்னத நோக்கத்துக்காக நாங்கள் ஒன்றாக இருக்கிறோம். பதவிக்கான சலுகைகளுக்காக நாங்கள் ஜனாதிபதிக்கு உதவவில்லை.



இத்தகைய தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல் எங்களிடம் இல்லை.

இந்த நாட்டை எப்போதும் பின்னோக்கி கொண்டு சென்றது ஜே. வி. பி.தான். 2022ஆம் ஆண்டு வீடுகளுக்கு தீ வைத்து கொடூரத்தை நாட்டில் விதைத்தது அநுரகுமார திஸநாயக்கவின் தலைக்கவச கும்பல்தான். இவ்வாறானதொரு குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படுமானால் நாட்டில் மீண்டும் இரத்தக்களரி ஏற்படும். எனவே, இம்முறை மிகவும் கவனமாக வாக்களிக்க வேண்டும். தனது 3 சதவீத வாக்குகள் 40-50 சதவீதமாக அதிகரிக்கும் என அநுரகுமார நினைக்கிறார். அது நடக்காது", என்றார். (ஐ)

# ரணிலின் பிரதான கொள்கை மக்கள்மீது வரி விதிப்பதுதான்!

## சம்பிக்க ரணவக்க சாடல்



கொழும்பு, ஒக. 31

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான கொள்கை நாட்டை வங்குரோத்து அடையச் செய்தவர்களை ஒன்றிணைத்துக்கொண்டு சாதாரண மக்கள் மீது வரி விதிப்பதென பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியான பின்னர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"சகலருக்கும் வெற்றி எனும் தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொள்கை பிரகடனத்தை ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வெளியிட்டுள்ளார். எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மிகவும் முக்கியமானதொரு தேர்தலாகும்.

இரண்டு விடயங்களை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும். ஒன்று நாட்டை தற்போதுள்ள வாறே கொண்டு செல்வதா அல்லது அதற்கு அப்பால் சென்று பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதா என்று. இதனிடையே சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளார். தேரவாத வர்த்தகப் பொருளாதாரம் என்று கூறுகிறார். எமக்கு தெரியவில்லை அது எந்தப் புத்தகத்தில் உள்ளதென்று. ஆனால், புத்த தர்மத்தில் சில குறிக்கோள்கள் உள்ளன. இந்த கொள்கைகளை பொருளாதார ரீதியாக பின்பற்ற முடியும் என அதில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான கொள்கை நாட்டை வங்குரோத்து அடையச் செய்தவர்களை ஒன்றிணைத்துக்கொண்டு சாதாரண மக்கள் மீது வரி விதிப்பது. இதேபோன்று தேசிய மக்கள் சக்தியும் கொள்கை பிரகடனத்தை வெளியிட்டுள்ளது. அவர்கள் கூறுகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி அவர்களுடைய கொள்கை பிரகடனத்தில் உள்ளவற்றை குறிப்பிடுள்ளதாக. அவ்வாறான தேவை எமக்கில்லை. தற்போது தெளிவாக புரிந்திருக்கும் யாருடைய கொள்கை பிரகடனத்தை யார் வெளியிட்டுள்ளனர் என்று. உண்மையை கூற வேண்டுமானால் தேசிய மக்கள் சக்தியிடம் எந்தவொரு கொள்கையும் இல்லை" என்றார். (ஐ)

# தேர்தல் முடிவுக்கு முன்பாக வன்முறைக்கு சதித் திட்டம்

## விமல் வீரவன்ஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 31

ஜனாதிபதி தேர்தல் முடிவு வெளியாவதற்கு முன்னர் பெரும் வன்முறைகளை ஏற்படுத்த பெரும் சதி தீட்டப்பட்டுள்ளது என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நாட்டை பங்களாதேஷ் போன்ற நிலைமைக்கு தள்ளவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதற்கும் சிவப்பு தம்பிகளுக்கும் தொடர்பு உள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை தொடர்ந்தும் ஜனாதிபதி ஆசனத்தில் வைத்திருக்க திட்டமிட்ட சூழ்ச்சிகள் இடம்பெறுகின்றன என்றும் நேற்று முன்தினம் திலித் ஜயவீரவுக்கு ஆதரவான பிரசாரக் கூட்டத்தில் அவர் குற்றஞ்சாட்டினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எங்கள் பிள்ளைகளை எங்களிடம் தாருங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திருகோணமலையில் கண்டனப் பேரணி

திருகோணமலை, ஓக. 31

**“எங்கள் பிள்ளைகளை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்” என்று வலியுறுத்தி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நேற்று திருகோணமலையில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றது.**

இந்தப் பேரணி நேற்றுக் காலை 9 மணியளவில் திருகோணமலை நகர சபைக்கு முன்னால் ஆரம்பித்து பிரதான வீதி ஊடாகச் சென்று பின்னர் கடற்கரைக்கு முன்பு போராட்டம் நடைபெற்றது.

இதில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை பிரதேசங்களில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

கையில் தீச்சட்டி ஏந்தி தங்கள் மனக் கிளர்ச்சியை வெளியிட்ட தாய்மார்கள், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி வேண்டும், இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும், உறவுகளைத் தேடிக் கண்டுபிடித்து ஒப்படைக்க வேண்டும், எங்கள் உரிமைகளை எங்கள் பிள்ளைகளை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கண்டனப் பேரணியில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 300இற்கும் மேற்பட்ட உறவுகள் கலந்து கொண்டனர்.

(எ)



# பேரணியை தடுத்த பொலிஸார் திருகோணமலையில் பதற்றம்!

திருகோணமலை, ஓக. 31

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் நேற்று நடத்தப்பட்ட கண்டனப் பேரணியை தடுத்து நிறுத்த பொலிஸார் முற்பட்டதால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இந்தக் கண்டனப் பேரணி நடைபெற்றுக் கொண்டிருந்த போது பொலிஸார் திடீரென குறுக்கிட்டு பேரணியை குழப்ப முற்பட்டனர். இதனால் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த நிலையில், பொலிஸார் கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்தனர். இதனையடுத்து அவரை விடுவிக்கும் வரை தாங்கள் இந்த இடத்தை விட்டுப் போகப் போவதில்லை என்று போராட்டக்காரர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து பொலிஸார் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து நிலைமையை சுமுகத்துக்கு கொண்டு வந்தனர்.(எ)

# மத்திய முகாம் மருத்துவமனைக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு



கல்முனை, ஓக. 31

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள மருத்துவமனைகளின் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடும் பொருட்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகல மருத்துவமனைகளினதும் அபிவிருத்திக் குழுக்களை சந்தித்து வருகின்றார்.

அந்தவகையில் மத்திய முகாம் பிரதேச மருத்துவமனையின் அபிவிருத்தி தொடர்பில் அந்த மருத்துவமனையின் அபிவிருத்திக் குழுவினர் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸடீனை சந்தித்து கலந்துரையாடினார்.

தற்போது அந்த மருத்துவமனையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள், தேவைகள் மற்றும் குறைபாடுகளை கேட்டறிந்து கொண்ட பிராந்தியப் பணிப்பாளர், அபிவிருத்திக் குழுவால் முன்வைக்கப்பட்ட தேவைகளில் சிலவற்றை நிவர்த்தி செய்து தருவதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன் மருத்துவமனையில் அவசரத் தேவையாக காணப்பட்ட சக்கர நாற்காலியையும் மருத்துவமனை பொறுப்பதிகாரியிடம் பிராந்திய பணிப்பாளர் கையளித்ததுடன் மருத்துவமனை அபிவிருத்திக் குழுவுக்கான தற்காலிக அனுமதியும் வழங்கி வைக்கப்பட்டது.

மருத்துவமனைகளின் அபிவிருத்தி தொடர்பில் அபிவிருத்திக் குழுக்களுடன் கலந்துரையாடி வரும் பணிப்பாளரின் நடவடிக்கைகளை பாராட்டிய குறித்த மருத்துவமனையின் அபிவிருத்திக் குழுவினர், அந்த மருத்துவமனையின் அவசர தேவையாகக் காணப்பட்ட சக்கர நாற்காலி பிரச்னையை தீர்த்தமைக்காக பணிப்பாளருக்கு நன்றியும் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். சீ. எம்.மாஹிரும் கலந்து கொண்டார்.

(எ)

# போதைப்பொருள் தடுப்பு பற்றி மாணவர்களுக்கு விசேட பயிற்சி





சம்மாந்துறை, ஓக. 31

மாணவர்களுக்கான தலைமைத்துவ மற்றும் போதைப் பொருள் தடுப்பு பற்றி ஒரு நாள் பயிற்சி நேற்று முன்தினம் சம்மாந்துறை மல்வத்தை விபுலானந்த மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

ஒலுவில் அல் ஹம்றா மகா வித்தியாலய மாணவர்கள் 35 பேர் இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டு சான்றிதழ்களை பெற்றனர்.

பொலிஸ் கெடட் பிரிவின் பணிப்பாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சிந்தக குணரத்னவின் தலைமை மற்றும் நேரடி மேற்பார்வையில் பயிற்சி மற்றும் உயர் பயிற்சி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஜீவ மெதவத்தவின் வழிகாட்டலில் மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி மற்றும் போதைப்பொருள் தடுப்புக்கான பயிற்சி முகாம் என்பன நடத்தப்பட்டன.

இதில் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கலந்து கொண்டு மாணவர்களுக்கு தலைமைத்துவம் தொடர்பில் ஆலோசனைகளை வழங்கினார்.

இந்தப் பயிற்சி நெறியானது பொலிஸ் கெடட் பிரிவின் கட்டளைத் தளபதியின் மேற்பார்வையின் கீழ் பொலிஸ் கெடட் தலைமையகம் மற்றும் பொரலந்த பொலிஸ் கெடட் பயிற்சி நிலையத்தின் பொலிஸ் கெடட் ஆலோசகர்களால் நடத்தப்பட்டன.

(எ)

# “வாசிக்கும் மலர்கள்” சிறுவர் நிகழ்வு

கல்முனை, ஓக. 31

நூலகங்களின் செயல்பாட்டினை வினைத்திறன் மிக்கதாகவும் சிறுவர், சிறுமிகளை வாசிப்பின்பால் ஈர்ப்பதற்காகவும் சிறுவர்களை நூல்களோடும், நூலகத்தோடும் தொடர்புபடுத்துவதற்காவும் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை மருத்தூர்க்கனி பொது நூலகமானது தமது நூலகத்துக்கு வந்து வாசிக்கும் ஒரு தொகுதி சிறுவர்களை அழைத்து அவர்கள் வாசித்த கதைகள் மற்றும் பாடல்கள், நகைச்சுவைகள் என்பவற்றை பகிர்ந்து கொள்ளும் நிகழ்வொன்றை “வாசிக்கும் மலர்கள்” என்ற தலைப்பில் நடத்தியது.



நூலகர் ஹரீஷா சமீம் தலைமையில் நடைபெற்ற சிறுவர்களை கவர்ந்து மகிழ்வுறச் செய்த இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர்களுக்கு நூலக உத்தியோகத்தர்கள் அன்பளிப்பு பொதிகளுடன், இனிப்புகளையும் வழங்கினர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாமீது இஸ்ரேல் கொடூரத் தாக்குதல்

## 68 பேர் உயிரிழப்பு 77 பேர் காயம்

காஸா, ஓக. 31

**காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய கொடூரத் தாக்குதலில் நேற்றுக் காலை 10 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 68 பலஸ்தீனர்கள் பலியாகினர். மேலும் 77 பேர் காயமடைந்துள்ளனர் என்று காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**



காஸாவில் உள்ள முக்கிய இடங்களான ரபா, பெஸ்ட் பேங்க் உள்ளிட்ட பகுதிகளை இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்கி வருகிறது. குறிப்பாக, வெஸ்ட் பேங்கில் தாக்குதலைத் தீவிரப்படுத்திய இஸ்ரேலிய இராணுவத்தினர் புதன்கிழமையன்று அந்தப் பகுதியில் நுழைந்து தாக்குதல் நடத்தினர். அதில் 18 பலஸ்தீனர்கள் பலியாகினர்.

அதேவேளையில், கிழக்கு ரபாவில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். நூர் ஷம்ஸ் அகதிகள் முகாமில் நடந்த தாக்குதலில் நான்கு பலஸ்தீன போராளிகளை இஸ்ரேலியப் படைகள் கொன்றன. வெஸ்ட் பேங்கில் கடந்த 20 ஆண்டுகளில் இஸ்ரேல் நடத்தும் மிகப் பெரிய தாக்குதல் இது எனக் கருதப்படுகிறது.

இஸ்ரேல் தாக்குதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் 68 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 77 பேர் காயமடைந்துள்ளனர் என்று காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது வரை காஸா மீதான இஸ்ரேலின் போரில் 40, 602 பேர் கொல்லப்பட்டனர். 93 ஆயிரத்து 855 பேர் காயமடைந்துள்ளனர். மேலும், ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களின் போது இஸ்ரேலில் 1,139 பேர் கொல்லப்பட்டனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட வெஸ்ட் பேங்கில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் நடத்தும் எதிர்வினைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் கண்டித்துள்ளது. (எ)



# அமெரிக்காவில் ஒரே நாளில் ரூ. 900 கோடி முதலீடு ஈர்ப்பு

## முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவிப்பு

வாஷிங்டன், ஓக. 31

“சான் பிரான்சிஸ்கோவில் ஒரே நாளில் நம்பிக்கை அளிக்கும் வகையில் முதலீடுகள் கிடைத்துள்ளன. அமெரிக்காவில் ஒரே நாளில் (இந்திய மதிப்பில்) 900 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இது சென்னை, மதுரை, செங்கல்பட்டு உள்ளிட்ட நகரங்களில் 4,100 வேலைவாய்ப்புகளுக்கு வழிவகுக்கும் என்று தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தனது எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஸ்டாலின் புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். இந்த நிலையில், சான் பிரான்சிஸ்கோவில் நேற்று நடந்த முதலீட்டாளர்கள் மாநாட்டில் பல நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது என்றும் அமெரிக்காவில் இருந்து மேலும் அதிக முதலீடுகள் தமிழ்நாட்டுக்கு ஈர்க்கப்படுமெனவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார். (எ)

# ரெலிகிராம் தலைமை அதிகாரி பவெல் துரோவ் விடுவிப்பு

## பிரான்ஸை விட்டு வெளியேற தடை

பாரிஸ், ஓக. 31

கைது செய்யப்பட்ட ரெலிகிராம் தலைமை அதிகாரி பவெல் துரோவ் விடுவிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் அவர் மீதான குற்றச்சாட்டுகள் காரணமாக அவர் பிரான்ஸ் நாட்டை விட்டு வெளியேறத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ரெலிகிராம் மூலம் நடைபெறும் சட்டவிரோத குற்றச் செயல்களுக்கு அந்த நிறுவனம் துணை போகிறது, குற்றவியல் நடவடிக்கையை கண்காணிக்கத் தவறியது மற்றும் பயனாளர்களின் தரவுகளை அரசிடமிருந்து மறைத்து பாதுகாத்தது போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் பவெல் துரோவை பிரான்ஸ் அரசு கைது செய்தது.



இந்த நிலையில், நிபந்தனை பிணையில் அவர் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கு மட்டுமல்லாது தனது மகனை துன்புறுத்திய குற்றச்சாட்டும் பவெல் துரோவ் மீது உள்ளது. அது தொடர்பாகவும் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இது குறித்து சுவிட்ஸர்லாந்து நாட்டிலும் அவரது முன்னாள் மனைவி முறைப்பாடு செய்துள்ளார். (எ)

# லெபனானை விட்டு வெளியேறுமாறு மக்களுக்கு இங்கிலாந்து எச்சரிக்கை

பெய்ரூட், ஓக. 31

லெபனானில் வசிக்கும் தங்கள் நாட்டு மக்களை விரைவில் அந்த நாட்டை விட்டு வெளியேற இங்கிலாந்து அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையே போர் பதற்றம் தீவிரமடைந்துள்ளதை அடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏவுகணை மற்றும் வான்வழித் தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. இந்த மோதலால் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. விரைவில் இந்த நிலை மோசமடையக்கூடும். அயல்நாட்டு அலுவலகத் தூதரக குழுக்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். ஆனால், இந்த மோதல் தீவிரமானால், நாங்கள் அனைவரையும் உடனடியாக வெளியேற்ற முடியாமல்



போகும் இக்கட்டான சூழல் உருவாகலாம்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அரசு சார்பில் நாங்கள் எந்த உத்தரவாதமும் வழங்க முடியாது. நிலைமை மோசமானால், மக்கள் பாதுகாப்பு முகாம்களுக்கு செல்ல வலியுறுத்தப்படலாம். இதனால் லெபனானில் உள்ள இங்கிலாந்து மக்கள் அங்கிருந்து வெளியேறிவிடுங்கள் என்பதே எங்களின் எளிமையான தகவல் என்று இங்கிலாந்து வெளிவிவகார செயலாளர் டேவிட் லேமி தெரிவித்தார். (எ)

# அமெரிக்காவின் எதிர்காலத்துக்கான போராட்டமே ஜனாதிபதித் தேர்தல்

## துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ்

வாஷிங்டன், ஓக. 31

ஜனாதிபதித் தேர்தல் என்பது அமெரிக்காவின் எதிர்காலத்துக்கான போராட்டம் என்று ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடும் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார். அதேபோன்று ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார்.

தேர்தல் நெருங்கி வரும் சூழலில் தற்போது இரு கட்சியினரும் தீவிர பிரசாரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் ஜோர்ஜியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் கமலா கூறியவை வருமாறு, [illegible] வேண்டியுள்ளது. ஆனால், கடினமாக உழைப்பது நமக்கு புதிதல்ல.



கடுமையான போராட்டங்கள் எனக்கு பழக்கப்பட்டவை. எனது தரப்பு எப்போதும் மக்களின் தரப்புதான்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் வன்கொடுமைகளை எதிர்த்து போராடியிருக்கிறேன். அந்தப் போராட்டங்கள் எதுவும் எளிதாக இருந்ததில்லை. அதே போன்று தேர்தல் போராட்டமும் எளிதானது அல்ல. இது அமெரிக்காவின் எதிர்காலத்துக்கான போராட்டம்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

இலங்கையில் காணாமலாக்கப்பட்டோருக்கு

# என்ன நடந்தது என்ற உண்மை கண்டறியப்படுவது அவசியம்!

## சர்வதேச செஞ்சிலுவை சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஒக. 31

**இலங்கையில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக நீண்டகாலமாகக் காத்திருக்கின்றார்கள். அவர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு இடமளிக்கும் அதேவேளை, அவர்களின் உறவுகளுக்கு என்ன நேர்ந்தது எனும் உண்மையைக் கண்டறிவதற்குரிய சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவை சங்கம் வலியுறுத்தியிருக்கிறது.**

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினத்தை ஒட்டி அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உலகளாவிய ரீதியில் யுத்தம், வன்முறைகள், அனர்த்தங்கள், மனிதாபிமான நெருக்கடிகள் மற்றும் புலம்பெயர்வு போன்ற பல்வேறு காரணிகளால் தமது குடும்பத்தினரை, அன்புக்குரியவர்களை பிரிந்த சகலரையும் நாம் இன்றைய தினத்தில் நினைவுகூருகின்றோம்.

2023ஆம் ஆண்டின் இறுதியில் உலகளாவிய ரீதியில் 2 இலட்சத்து 39 ஆயிரத்து 700இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயிருக்கின்றனர் என்று செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கக் கூட்டிணைவில் பதிவு செய்யப்பட்டி ருக்கின்றார்கள். இருப்பினும், இந்த எண்ணிக்கை காணாமலாக்கப்படல்களின் உண்மை நிலவரத்தையும் தீவிரத் தன்மையையும் துல்லியமாகப் புலப்படுத்தவில்லை.

ஒவ்வொரு வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவத்தின் பின்னாலும் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என அறிந்துகொள்ள முடியாததனால் உறவுகளிடையே அளவற்ற துயரம் மறைந்திருக்கின்றது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை பொறுத்தமட்டில், இத்தகையதொரு பிரச்னை உண்டு என்பதை ஏற்றுக்கொள்வதும் அதற்குரிய தீர்வை வழங்குவதும் நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு இன்றியமையாததாகும். மாறாக இப்போதும் தமது அன்புக்கு உரியவர்களைத் தேடிக்கொண்டிருக்கும் சகல சமூகத்தை சேர்ந்தவர்களினதும் துன்பியல் அனுபவங்களுக்குரிய அங்கீகாரத்தை வழங்க மறுப்பதானது அவர்கள் மத்தியில் அதீத கோபம் தூண்டப்படுவதற்கும், நல்லிணக்க செயல்முறையில் பின்னடைவு ஏற்படுவதற்குமே வழிகோலும்.

எனவே, இப்பிரச்னை தீர்க்கப்படாவிடின், தனிநபர்களால் மாத்திரமின்றி ஒட்டுமொத்த சமூகத்தாலும் முன்னோக்கிப் பயணிக்கமுடியாது - என்றுள்ளது. (ஐ)



# மலையக தமிழ் தலைவர்கள் அஜித் டோவலுடன் சந்திப்பு

கொழும்பு, ஒக. 31

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணமாக வந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலை மலையக தமிழ் அரசியல் தலைவர்கள் சந்தித்துப் பேசினர்.

கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான், அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன், கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், தொழில் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான வடிவேல் சுரேஷ் ஆகியோரே இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்த சந்திப்பின்போது இலங்கை மற்றும் இந்தியா இடையிலான உறவை வலுப்படுத்துதல் மற்றும் சமூக பொருளாதார விடயங்கள் மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானால் நினைவு சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது. (ஐ)

# வரி செலுத்துவோர் தொகை 3 இலட்சத்தால் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 31

இந்த வருடத்தில் வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 3 இலட்சத்து 6 ஆயிரத்து 246 ஆக அதிகரித்துள்ளது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு (2023) டிசெம்பர் 31 ஆம் திகதி வரை மொத்த வரி செலுத்துவோர் எண்ணிக்கை 9 இலட்சத்து 97 ஆயிரத்து 858ஆக இருந்தது. 2024 ஜூலை 31 அன்று இந்த எண்ணிக்கை 13 இலட்சத்து 14 ஆயிரத்து 122 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 31 வரை வரி செலுத்துவோர் எண்ணிக்கை 8 இலட்சத்து 79 ஆயிரத்து 778 ஆகவும் ஏனைய வரி செலுத்துவோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 80 ஆகவும் பதிவாகியுள்ளது.

இந்த ஆண்டு ஜூலை 31 வரை வரி செலுத்துவோர் எண்ணிக்கை 11 இலட்சத்து 82 ஆயிரத்து 210 ஆகவும் ஏனைய வரி செலுத்துவோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 910 ஆகவும் அதிகரித்துள்ளது.

இதற்கிடையில், ஏற்கனவே ரி. ஐ. என். எண்ணைப் பெற்ற மொத்த நபர்களின் எண்ணிக்கை 45 இலட்சத்து 77 ஆயிரத்து 303 ஆகவும் பதிவாகியுள்ளது.

# தென்னிலங்கையை உலுப்பிய கொலைகள் 95 சதவீத விசாரணைகள் நிறைவடைந்தன!

கொழும்பு, ஒக. 31

'கிளப் வசந்த' எனப்படும் வர்த்தகர் சுரேந்திர வசந்த பெரேரா உள்ளிட்ட இருவர் அண்மையில், கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணை 95 வீதம் நிறைவடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவிக்கையில்,

கடந்த ஜூலை 08 ஆம் திகதி அதுருகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் கொல்லப்பட்டனர். மேலும் நால்வர் காயமடைந்தனர். இந்த சம்பவத்துடன், தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பெண் ஒருவர் உட்பட 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும், இந்த வழக்கில் தொடர்புடைய இரண்டு துப்பாக்கிதாரிகள் உட்பட அனைத்து முக்கிய சந்தேகநபர்களும் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு, பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறெனினும், சம்பவம் தொடர்பில் 'வெளிநாட்டுத் தலையீடு' காணப்படுவதால், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் நடக்கின்றன. இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள், தற்போது வெளிநாடுகளில் தலைமறைவாக உள்ளவர்கள், சர்வதேச குற்றக் கும்பல் அல்லது போதைப் பொருள் வலையமைப்புடன் தொடர்புடையவர்கள். கடந்த புதன்கிழமை தேடப்பட்டு வந்த இரண்டாவது துப்பாக்கிதாரியும் கார் சாரதியும் கைது செய்யப்பட்டனர் என்றும் கூறினார். (ஐ)



# கூப்பன் அட்டைக்கு பதில் படையினருக்கு பணம்!

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஒக. 31

படையினருக்கான கூப்பன் அட்டை கொடுப்பனவை பணமாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இது நடைமுறைக்கு வரும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

அவரின் அமைச்சில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் கூறினார்.

முப்படைகளின் அனைத்து அதிகாரிகள் மற்றும் ஏனைய தரங்களில் இருப்பவர்களுக்கும் அரசாங்கம் கூப்பன் அட்டை கொடுப்பனவு வழங்குகிறது. இந்த கொடுப்பனவு சில அதிகாரிகளுக்கு மூன்றுவேளை உணவாகவும் மேலும் சிலருக்கு அவர்களின் சம்பளத்துடன் இணைத்து பணமாகவும் வழங்கப்படுகிறது. இதற்காக அரசாங்கம் 3 ஆயித்து 300 கோடி ரூபாயை ஒதுக்கி வருகிறது.

போர் காலத்தில் படையினருக்கு இந்தக் கொடுப்பனவு உணவாக மட்டும் முகாம்களில் வழங்கப்பட்டது. தற்போது போர் இல்லாததால் அது நிவாரணமாக வழங்கப்படுகிறது. அதிகாரி ஒருவருக்கு நாளாந்தம் ஆயிரத்து 161 ரூபாய் 56 சதமும் சிப்பாய்களுக்கு 967 ரூபாய் 53 சதமும் ஒதுக்கப்படுகிறது.

இந்த ஒதுக்கீடு எதிர்வரும் ஜனவரி முதல் பணமாக வழங்கப்படும். இதன்மூலம் மோசடி தவிர்க்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# பொது செயலர் பதவியிலிருந்து பாலிதவை நீக்கியது ஐ. தே. க.?

கொழும்பு, ஒக. 31

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான உத்தியோகபூர்வ கடிதத்தில் அந்தக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் ஒப்பமிட்டார் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

பாலித ரங்கே பண்டார பொதுச் செயலாளர் பதவியில் தனது கடமைகளை சரியாக செய்யவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர் பதவி நீக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், எம். பி. பதவியை துறந்த ஐக்கிய மக்கள் சக்தியின் தலதா அத்துக்கோரளவுக்கு பொதுச் செயலர் பதவியை வழங்குமாறு கோரிக்கைகள் எழுந்துள்ளன என்றும் கூறப்படுகின்றது. எனினும், தலதா இதுவரை ஐ. தே. கவின் உறுப்பினராக மீளவும் சேரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, "பதவி நீக்கப்பட்டதாக எனக்கு எந்தவோர் அறிவித்தலும் வரவில்லை. அப்படி வந்தால் உங்களுக்கு சொல்கிறேன்", என்று பாலித ரங்கே பண்டார ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணாமல் போனோர்...

காத்திருக்கின்றார்கள். அவர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு இடமளிக்கும் அதேவேளை, அவர்களது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது எனும் உண்மையைக் கண்டறிவதற்குரிய சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கோரியுள்ளது.

நேற்று வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், அதனை முன்னிட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது-

உலகளாவிய ரீதியில் யுத்தம், வன்முறைகள், அனர்த்தங்கள், மனிதாபிமான நெருக்கடிகள் மற்றும் புலம்பெயர்வு போன்ற பல்வேறு காரணிகளால் தமது குடும்பத்தினரை, அன்புக்குரியவர்களை பிரிந்த சகலரையும் நாம் இன்றைய தினத்தில் நினைவு கூருகின்றோம்.

2023 ஆம் ஆண்டின் இறுதியில் உலகளாவிய ரீதியில் 2 இலட்சத்து 39 ஆயிரத்து 700 இற்கும் மேற்பட்டோர் காணாமல்போயிருப்பதாக செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச்சங்கக் கூட்டிணைவில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இருப்பினும் இந்த எண்ணிக்கை காணாமலாக்கப்படல்களின் உண்மை நிலைவரத்தையும், தீவிரத்தன்மையையும் துல்லியமாகப் புலப்படுத்தவில்லை.

இலங்கையில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணாமல்போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதற்காக நீண்டகாலமாகக் காத்திருக்கின்றார்கள்.

அவர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு இடமளிக்கும் அதேவேளை, அவர்களது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது எனும் உண்மையைக் கண்டறிவதற்குரிய சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றுள்ளது. (அ)

## வவுனியா...

இதன் காரணமாக மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் ஸ்தலத்தில் பலியானதோடு மற்றயவர் வவுனியா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரணித்தவர் யாழ்ப்பாணம், பருத்தித்துறையை பரமநாத் சிவாகரன் (வயது 30) எனவும் காயமடைந்தவர் செல்லத்துரை கிருஷ்ணபாலன் (வயது 37)தெரியவருகின்றது.

இதேவேளை பூவரசங்குளம் பொலிசார் குறித்த விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

## தமிழ் பொது...

கருத்தூன்றி ஆராய்ந்து, பொருத்தமான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டிய நிலைக்கு காலம் எம்மை நிர்ப்பந்தித்திருக்கிறது.

அதனடிப்படையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினராகிய நாங்கள், கட்சியினுடைய இணக்க விதிகளுக்கு உட்பட்டு, மாவட்டத்தின் பல்வேறு தரப்பினருடனும், சிவில் சமூகம் மற்றும் மதகுருமார்களுடனும், பொதுமக்களுடனும் அவ்வப்போது கலந்துரையாடி பெறப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில், 2024.08.30 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டக் கிளையாக ஒன்றிணைந்து, ஏகமனதாக எடுத்த கீழ்வரும் தீர்மானத்தை, மத்திய செயற்குழுவின் தழுவு அனுமதிக்காக தயவுடன் முன்னளிப்புச் செய்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற நிலைப்பாட்டை பொறுப்போடு ஆராய்ந்து, நிகழ்கால இலங்கையினுடைய ஆட்புல ஒருமைப்பாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், தமிழ் மக்களினுடைய இனத்தேசிய அடிப்படையில் நின்று பொருத்தமான உபாயம் ஒன்றை நாம் சிந்திப்பது காலத்தேவையானது என்று நம்புகின்றோம்.

போருக்குப் பிந்திய 15 ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில், எதிர்பார்க்கப்பட்ட நற்பலன்களை விட பிரதிகூலமான வெளிப்பாடுகளையே தமிழ்மக்கள் அனுபவிக்க நேர்ந்திருக்கிறது என்பது கசப்பானது எனினும் அதுவே உண்மையானது ஆகும். போர் ஒன்றின் பின்னராக தோல்வியடைந்த மனநிலையில் விடப்பட்ட தமிழ்ச்சமூகத்தை அதிலிருந்து மீட்டெடுக்கும் பணியையே எமது அரசியல் இயக்கம் பிரதான பணியாகக் கொண்டிருந்தது. எனினும் உள்நாட்டுக்கு உள்ளேயும், சர்வதேச சமூகத்தோடு இணைந்தும், எமது இராஜதந்திர, புத்திபூர்வமான அணுகுமுறைகள் ஊடாகவும் எமது மக்களின் வலிகளுக்கு நிவாரணம் வழங்கவோ, அவர்களது நம்பிக்கையை கட்டியெழுப்பவோ இயலாதிருந்திருக்கின்றோம் என்பதை பொறுப்புடன் ஏற்றுக்கொள்ளுகின்ற சந்தர்ப்பம் ஒன்றை இந்தத் தேர்தல் எங்களுக்குத் தந்திருக்கின்றது.

கூருணர்வு மிக்க அரசியல் திறன், அணுகுமுறை மற்றும் சர்வதேச சமூகத்தின் வாஞ்சையைப் பெற்றுக்கொள்ளல் என்பதில் நிலைதளர்ந்து போயுள்ள சூழல் குறித்து தமிழ்த்தேசிய ஆர்வலர்களிடமும், அறிவுஜீவிகளிடமும், சாதாரண பொதுமக்களிடமும் எதிர்காலம் பற்றிய ஐயுறு நிலை அதிகம் வளர்ந்துள்ளமையை மக்கள் பிரதிபலித்து வருகிறார்கள் என்பதை எம்மால் உணர முடிகிறது.

மேற்படி இக்கட்டான சந்தர்ப்பம் ஒன்றில் போரின்போதும், போருக்குப் பின்னரும் நிகழ்ந்துவரும் இழப்புகளுக்கு பரிகாரம் காணவும், சர்வதேச அணுகுமுறைகளில் விருத்தியை ஏற்படுத்தவும், ஜெனிவாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்களை வலுப்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிலைமாறுகால நீதிச் செயற்பாட்டை வழிப்படுத்தவும், மீள நிகழாமையை வலியுறுத்தி தாயகத்தில் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றைக் கோரவும் முன்னகர்ந்து செல்ல வேண்டிய தலைமைத்துவத்தை எமது மக்கள் எதிர்பார்த்து இருக்கின்றார்கள்.

அறிவுபூர்வமானது என்று நம்பப்படும் கருத்தியல்களுக்கும், எமது மக்களினுடைய உணர்வு நிலைகளுக்கும் இடையிலான போராட்டமாக இந்தத் தேர்தல்களம் விரிந்துள்ளமையால், மக்கள் எது சாத்தியம் என்று நம்புகின்றார்களோ, அவற்றைக் கவனமாக ஆராய்ந்து, தமிழ்த்தேசிய உணர்வுத் தளத்துடன் இணைந்த தீர்மானம் ஒன்றை, அதன் உயிர்நாடியாக விளங்குகின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்க்கமான முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே பெரும்பான்மைத் தமிழ் மக்களுடைய கருத்துநிலையாக உள்ளது என்பதை தங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

மேற்படி விடயங்கள் ஒவ்வொன்றையும் மக்கள் மத்தியிலும், அரசியல் ஆர்வலர்கள் மத்தியிலும் பொதுசன அபிப்பிராயமாகப் பெற்று எமது மாவட்டக் கிளையும், பிரதேசக் கிளைகளும், உள்ளூராட்சி மற்றும் மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களும் இணைந்து, கள யதார்த்தத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய கொள்கை நிலைப்பாட்டைப் பாதுகாத்து, மக்கள் மத்தியில் எமது அரசியல் இயக்கம் நெருங்கிச் செயற்படும் வகையில் தாயகத்தின் சிவில் அமைப்புகளினாலும், தமிழ்த்தேசியப் பரப்பிலுள்ள பெரும்பான்மைக் கட்சிகளினாலும் முன்மொழியப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டுமென்ற ஏகமனதான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம் என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகிறோம் - என்றுள்ளது. (அ)

# சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பகத்துக்கு சீல்!

யாழ்ப்பாணம், ஓக. 31

சுழிபுரத்தில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய வெதுப்பகம் ஒன்று சீல் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், அதன் உரிமையாளருக்கு 24ஆயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் உணவு கையாளும் நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய வெதுப்பகம் அடையாளம் காணப்பட்டது. அந்த வெதுப்பகத்துக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, வெதுப்பக உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். இதையடுத்து அவருக்கு 24 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், சுகாதார குறைபாடுகளை சீர் செய்யும் வரை வெதுப்பகத்தை மூடுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## தேர்தல்...

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

கண்காணிப்பாளர்கள் தங்கள் கண்களாகவும் காதுகளாகவும் இருக்கப் போகிறார்கள் என்றும் அவர்கள் தேர்தல் செயன்முறையின் ஒவ்வொரு அம்சத்தையும் உன்னிப்பாக அவதானிப்பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

## ஜனாதிபதி...

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்த சந்திப்பில் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்கவும் கலந்துகொண்டார். (அ)

## காணாமல்...

கிளிநொச்சி மற்றும் திருகோணமலையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

உலகின் பல நாடுகளிலும் பல்வேறு காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சர்வதேச காணாமற்போனோர் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு, செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை சார்ந்த அமைப்புகள் இந்த தினத்தை முன்கொண்டு செல்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை யுத்த காலத்திலும், யுத்தத்துக்குப் பின்னரும் ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவினர் களுக்கு என்னானது என்பது குறித்து அறிவிக்குமாறு வடக்கு, கிழக்கில் தொடர் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்ற நிலையில், நேற்று வடக்கு-கிழக்கில் கவனயீர்ப்பு பேரணிகள் இடம் பெற்றன.

அந்தவகையில் காணாமலாக்கப்பட்ட தமது உறவினர்களுக்கு நீதி கோரி, யாழ்ப்பாணத்தில் நேற்று காலை ஆர்ப்பாட்ட பேரணி இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் ஆரம்பமான பேரணி பருத்தித்துறை வீதி - ஆஸ்பத்திரி வீதி - காங்கேசன்துறை வீதி ஊடாக முனியப்பர் கோவிலடியை அடைந்தது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி குறித்த பேரணி இடம்பெற்றது.

பேரணியில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகத்தினர், அரசியல்வாதிகள், பொது மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் நேற்று காலை போராட்டம் ஆரம்பமானது.

குறித்த போராட்டத்தில், கலந்து கொள்வதற்காக மட்டக்களப்பில் இருந்து சென்ற காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள் சென்ற பஸ்ஸை வெருகல் பகுதியில் உள்ள பொலிஸார் தடுத்து நிறுத்தி கடும் சோதனைக்கு உட்படுத்தியிருந்தனர். (அ-01)

## பெரமுனவின்...

செப்ரெம்பர் 02 ஆம் திகதி தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு போராளியின் இதயத் துடிப்பை அறியும் அரசியல் சக்தி இருந்தால் அது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உருவாக்கிய பொதுஜன பெரமுன மாத்திரமே என அக்கட்சியின் வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (அ)

## நீக்கப்பட்டாரா...

நீக்கப்பட்டார் என தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல பத்திரிகைகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நான் நீக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தற்போது வரை நான் ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக எனக்கு எதுவித உத்தியோகபூர்வ அறிவிப்புகளும் விடுக்கப்படவில்லை.

அதேபோன்று கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதாக எனக்கு இதுவரை அறிவிக்கவில்லை.

தற்போதும் செயலாளர் நாயகம் பதவியில் கடமையாற்றி வருகிறேன். ஆனால் நான் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு பணத்துக்காக விலை போயுள்ளதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன. இது குறித்து எதிர் வரும் வாரத்தில் தகவல்கள் வெளியிடப்படும். அவ்வாறு நான் கட்சியிலிருந்து நீக்கப்பட்டால் நான் நிச்சயம் அறிவிப்பேன் - என்றார். (அ)

## அநுரவுடனும்...

ஆனால், அவர் தமிழ் தரப்பினர் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வாய்ப்பு உள்ள வேட்பாளர்களில் ஒருவராக கருதப்படும் அனுரகுமாரவையும் சந்தித்துள்ளமை குறித்து இராஜதந்திர மட்டத்தில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் புதுடில்லிக்கு அழைக்கப்பட்ட அநுர குமாரவிடம் இந்தியா எதிர்கால அரசியல் நகர்வுகள் குறித்து கலந்துரையாடியிருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியுள்ள சூழலில் வெற்றி வேட்பாளர்களில் ஒருவராக கருதப்படும் அநுரவை இந்திய தரப்பு சந்தித்தன் ஊடாக எவர் வெற்றி பெற்றாலும் இணைந்து செயல்பட தயார் என்ற மறைமுக செய்தியையே சர்வதேசத்துக்கு இந்தியா வெளிப்படுத்தியுள்ளதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## குழந்தைகளுக்கு பரசிற்றமோலை அதிகளவு கொடுப்பதால் பாதிப்பு!

கொழும்பு, ஓக. 31

வைத்தியரின் பரிந்துரை யின் அடிப்படையிலேயே குழந்தைகளுக்கு பரசிற்ற மோலை கொடுக்க வேண் டும் என வைத்தியர் ரவி ஜயவர்தன தெரிவித்தார்.



குழந்தைகளுக்கு பரசிற்ற மோலை அதிக அளவு கொடுப் ணபதன் காரணமாக குழந்தைகள் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ள தாகவும் இதனால் குழந்தைகளின் கல்லீரலுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் தேசிய நச்சு தகவல் மையத் தலைவர் வைத்தியர் ரவி ஜயவர்தன கூறினார்.

வைத்தியரின் பரிந்துரையின் அடிப்படையிலேயே பரசிற்றமோலை கொடுக்கவேண்டும்.

குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்படும்போது அதிக அளவு பரசிற்றமோல் கொடுக்கப்படுவதால் குழந்தை களின் நிலை மேலும் மேசமான நிலைக்குள்ளாகும் வாய்ப்புள்ளதாகவும் வைத்தியர் குறிப்பிட்டார். (அ)

## தினேஷ் குணவர்தனவை சந்தித்தார் அஜித் டோவல்



கொழும்பு, ஓக. 31

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான பொரு ளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதால், பரஸ்பர நன்மைக்காக இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தவேண்டுமென, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல்,நேற்று முன்தினம் கொழும் பில் பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்தபோதே இதனைக் குறிப்பிட் டார்.

இலங்கையுடனான ஒத்துழைப்பை மேலும் விரிவு படுத்த இந்தியா விரும்புவதாகவும், முன்னுரிமை நலன் கள் குறித்து பிரதமரின் கருத்துக்களைக் கேட்ட றிந்ததாகவும் அஜித் டோவல் தெரிவித்தார்.

பாரிய அளவிலான மற்றும் சிறிய அளவிலான மாற்று எரிசக்தி திட்டங்களுக்கு இந்தியா ஆதரவு அளித்ததற்கு பிரதமர் நன்றியும் தெரிவித்தார். (அ)

# காணாமல்போனோரின் குடும்பங்களை தொடர்ந்து துன்புறுத்தும் இலங்கை அரசு!

## மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 31

**பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங் களை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து துன்புறுத்துவதாக சர்வ தேச மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம்சாட்டியுள்ளது.**

**இது குறித்து சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளதாவது -**




பாதுகாப்புப் படையினர் கண் காணிப்பு, மிரட்டல், பொய்யான குற்றச்சாட்டுகள், வன்முறை மற்றும் தன்னிச்சையான கைதுகள் மூலம் குடும்பங்களை தொடர்ந்து துன்புறுத்துகின்றனர். காணாமல் போனவர்களின் உறவினர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அன்றாட வேதனையை அனுபவிக் கிறார்கள். இதற்கு காரணமான அரச அமைப்புகள் அவர்களை மௌனமாக்க முயற்சி செய்கின்றன என என்று மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் ஆசியாவுக்கான துணை இயக்குநர் மீனாட்சி கங் குலி கூறினார்.

நூற்றுக்கணக்கான தாய்மார்கள் மனைவிகள் மற்றும் பலர் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியாமலேயே காலமானார்கள், மேலும் பலர் நீதியைப் பார்க்க அவர்கள் வாழ மாட்டார்கள் என்ற அச்சத்தை வெளிப்படுத்துகிறார்கள் என அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகில் அதிகளவானவர்கள் பலவந்தமாக காணாமலாக்கப் பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று. இலங்கை அதிகாரிகள் பல தசாப்தங்களாக காணாமல் ஆக்கப் பட்டவர்களின் தலைவிதியை வெளிப்படுத்தவோ அல்லது அதற்குப் பொறுப்பானவர்கள் மீது வழக்குத் தொடரவோ மறுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையா ளரின் அலுவலகம் சர்வதேச விசாரணைகளுக்கு வேண்டுகோள் விடுக்கவேண்டிய நிலையேற் பட்டுள்ளது.

பத்திரிகையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், குறிப்பாக பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் செயற்படுபவர்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவது, அச்சுறுத் தப்படுவது துன்புறுத்தப்படுவது நீடிக்கிறது.

ஐக்கிய நாடுகளுடன், இராஜ தந்திரிகள் உட்பட சர்வதேச செயற் பாட்டாளர்களுடன் ஈடுபாட்டை கொண்டுள்ள காணாமல்போனவர் களின் உறவினர்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவது, அச்சுறுத் தப்படுவது, துன்புறுத்தப்படுவது நடந்துகொண்டுதான் இருக்கிறது- என்றார். (அ)

# இறைவரித் திணைக்கள அதிகாரிகள் போன்று நடித்து பண மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது

கொழும்பு, ஓக. 31

உள்நாட்டு இறைவரித் திணைக் கள அதிகாரிகளைப் போன்று செயற்பட்டு பண மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

அளுத்கம - தர்கா நகரில் இவர் கள் கைது செய்யப்பட்டனர்.

வர்த்தக நிலையங்களில் வருமான வரியை அறவிட்ட சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட சந்தேகத் தின் அடிப்படையில் பிரதேச மக்களால் அளுத்கம பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாகவே சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாக பொலிஸார் தெரி வித்தனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக் கள அதிகாரிகளை போன்று நடித்து மக்களை ஏமாற்றும் மோச டிகள் தொடர்ச்சியாகவே இடம் பெற்று வருவதால் இது தொடர்பில் விழிப் புடன் இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுள்ளனர்.(அ)

# உள்ளூராட்சிமன்ற தேர்தல் வேட்புமனுக்கள் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற முடிவு

கொழும்பு, ஓக. 31

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக் கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை கள் குறித்து சட்ட மாஅதிபரின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

2022ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தமையின் ஊடாக அதற் காக முன்வைக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

அந்த வேட்புமனுக்களின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்டால் சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்களுக்கு வாக்களிக்க முடியாது போகுமென இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர கூறினார்.

அதேபோன்று 18 வயது பூர்த்தியடைந்த மேலும் சிலர் தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்க முடியாத நிலை ஏற்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப் பிட்டார்.

இதனிடையே, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்துவ தற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவில் கலப்பு மின்சார திட்டம் மிகவிரைவில்!

கொழும்பு, ஓக. 31

நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு பகுதிகளில் ஹைபிரிட் எனப்படும் கலப்பு முறையில் முன் னெடுக்கப்படவுள்ள எரிசக்தி வேலைத்திட்டத்துக்கான முதலா வது கொடுப்பனவு இந்தியாவால் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய தூ துவர் சந்தோஷ் ஜாவினால், எரி சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் சுலக்ஷன ஜயவர்தன மற்றும் இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் சேபாலவிடம் இந்த கொடுப்பனவு கையளிக்கப் பட்டதாக இந்திய தூதரகம் தெரி வித்துள்ளது.

இலங்கையின் வடக்கு பகுதி யில் உள்ள குறித்த 3 தீவுகளில் மின் சக்தி தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கில், 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவும் இலங்கையும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத் திட்டன.

இதனையடுத்து குறித்த திட் டத்தை முன்னெடுப்பதற்காக இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகார சபையினால் தனியார் நிறு வனத்துடன், கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப் பட்டது. அதற்கமைய, நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு பகுதிகளில் முதற்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த திட்டத்தை அடுத்த வருடம் மார்ச் மாதத்தின் ஆரம்பத்தில் நிறை வுறுத்த எதிர்பார்க்கப்படுகிறது.(அ)

## 2025 ஜனவரி முதல் அரச ஊழியரின் குறைந்தபட்ச சம்பளம் 55,000 ரூபா!

கொழும்பு, ஓக. 30

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், அரச ஊழி யர்களின் குறைந்தபட்ச வேதனம் 55,000 ரூபாவாக உயர்த்தப்படுமெனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனை கூறினார்.

அரசாங்கம் தயாரித்துள்ள பாதீட்டுக்கு அமையத் தேவையான ஏற்பாடுகளை வழங்கும் முறைகளின் ஊடாக ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்கவுள்ள தாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.